IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.12/2019 P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | B.NETHAJI |
| FATHER/HUSBAND NAME | - | BAKTHAVACHALU |
| VILLAGE | - | LATHERI |
| TALUK | - | GUDIYATTAM |
| CASTE | - | HINDU REDDY |
| CALLING | - | RICE BUSINESS |
| RELIGION | - | HINDU |
| AGE | - | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 18th day of November 2020.

முதல் விசாரணை.

நிரூபண வாக்குமூலம் தாக்கல். அதிலுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தாயாருக்காக அவருடைய பவர் ஏஜென்ட் என்ற முறையில் வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன். 21.10.1981ல் எனது தாயார் டெல்லி பாய் பெயரில் வாங்கப்பட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. எல்.ஐ.சியில் கடன் பெற்றதற்கான ஆதாரம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 வரிசையாக (எண்ணிக்கைகள் 2) குறியிடப்படுகிறது. என்னுடைய தகப்பனார் எல் ஐசிக்கு எழுதிய கடிதம் மற்றும் அசல் வழக்கு எண்.245/1997ல் கட்ட வேண்டிய தொகைக்கான கால்குலேசன் ஷீட் அவை முறையே வா.சா.ஆ.3 (2 எண்ணிக்கைகள்) வரிசையாக குறியிடப்படுகிறது. என் தகப்பனார் பெயரிலும் என்னுடைய பெயரிலும் ஏற்பட்ட மின் பயனீட்டு கட்டண அட்டைகள் 2 எண்ணிக்கைகள் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 வரிசையாக (2 எண்ணிக்கைகள்) குறியிடப்படுகிறது. மேலும் என் பெயரில்

4 ரசீதுகளும் என் தாயார் பெயரில் 1 ரசீதும் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகள் 5 எண்ணிக்கைகள் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 வரிசையாக (5 எண்ணிக்கைகள்) குறியிடப்படுகிறது. என்னுடைய ஆதார் அட்டை அசல் மற்றும் நகல் தாக்கல் செய்கிறேன். அசலுடன் நகல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.6ஆக குறியிடபப்டுகிறது.

மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பில் கால அவகாசம் வேண்டியதின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.